**சபரகமுவ மாகாண சபை 2017**

-----------------------------------------------------------------

சபரகமுவ மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப தயாரிக்கப்படுதலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதுமானளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் உபயோகப்படும் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சபரகமுவ மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்குகள் 2018 மார்ச் 29 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

2018 யூலை 16 இல் உள்ளவாறு மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதிலான முன்னேற்றம் பின்வருமாறு.

| | | **மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 |
| (iii) | மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 24 | 24 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 09 | 09 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 02 |
| (vi) | சட்டவாக்கக் கணக்குகள் | 05 | 05 |
| (vii) | அங்கத்தவர் முற்பணக் கணக்குகள் | 02 | 02 |
| | மொத்தம் | 70 | 70 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் மாகாண சபை நிதியத்திலிருந்து உருவான ரூபா 2,319,486,301 தொகையான சொத்துக்கள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் சொத்துக்கள் என்பன நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஒரு கணக்கு விடயத்திற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 12,657,255 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 12,905,550 ஆனமையால் ரூபா 248,295 இணக்கமின்மை காணப்பட்டது.

### 2.2.5 தொங்கற் கணக்கு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு திணைக்களத்திற்குரிய மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் ரூபா 10,044,595 கூட்டுத் தொகையுடைய இனங்காணப்படாத மீதிகள் இருந்தன.

### 2.2.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஓராண்டிற்கு மேற்பட்ட பெற வேண்டிய கணக்கு மீதிகளது கூட்டுப்பெறுமதி ரூபா 37,885,837 ஆக இருந்ததுடன் செலுத்த வேண்டிய கணக்குகளது மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 25,362,579 ஆகும்.

### 2.2.7 பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2018 யூலை 16 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்பட்டிருக்காததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 158,986,756 ஆகும்.

### 2.2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) அதிகாரச் சட்டங்கள் | |
| (i) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 183(5) ஆம் உப பிரிவு மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(8) மற்றும் (9) ஆம் உப பிரிவுகள் | தண்டப்பணம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானம் அறிவிக்கப்படும் நாள் முதலாக 14 நாட்களுக்குள் குறித்த நபரால் உள்ளூராட்சி ஆணையாளரிடம் குறித்த தொகை செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து அல்லது மேன்முறையீடு செய்யப்பட்டிருக்காதவிடத்து குறித்த நபர் வசிக்கும் பிரதேசத்துக்கு உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு குறித்த தொகையை அறவிடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்டிருந்த தண்டப்பணச் சான்றிதழ்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 05 தண்டப்பணச் சான்றிதழ்களுக்குரிய ரூபா 1,707,457 கூட்டுத்தொகை அறவிடப்படாதிருந்தது. |
| (ii) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு | செல்லுபடியான வரிப்பட்டியல் பெறப்படாமல் ரூபா 233,234 தொகையான பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XIX அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | எம்பிலிபிட்டிய சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அந்த அலுவலகத்திற்குரிய 09 கிராமிய |

| | |
|---|---|
| | சுகாதார நிலையங்கள் என்பவற்றில் 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குடியிருந்த உத்தியோகத்தர்களின் வீட்டு வாடகை அறவிடப்படாமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 1,894,650 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை<br>நிதி விதி 422.2 | 02 நிறுவனங்களால் நிழற்படப் பிரதி இயந்திரம் வழங்குவதாக பதிவு செய்யாத நிறுவனத்திடமிருந்து ரூபா 800,200 தொகையான 06 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>நி.பி 571 | அமைச்சு மற்றும் 04 திணைக்களங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 86,356,106 தொகையான காலாவதியான 130 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) அரச நிதிச் சுற்றறிக்கை<br>(i) 2012 சனவரி 05 ஆந் திகதி 01/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை<br>• 3.1 ஆம் பந்தி | மூன்று நபர் குழுவொன்றின் மூலம் ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பலாங்கொடை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினால் ரூபா 608,276,912 கூட்டுத்தொகையான 379 ஒப்பந்தங்கள் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. |
| • 3.2 ஆம் பந்தி | சமூக அடிப்படையிலான அமைப்பாக இனங்காண முடியாத நலன்புரிச் சங்கத்திற்கு பலாங்கொடை நிறைவேற்று பொறியியலாளர் |

| | | |
|---|---|---|
| | | அலுவலகத்தால் ரூபா 12,915,000 கூட்டுத்தொகையான 08 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| | • 3.4 ஆம் பந்தி | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் சமூக அடிப்படையிலான அமைப்பின் / சங்கத்தின் அதிகாரப்பிரதேசத்தில் இருக்கவேண்டிய போதிலும் அதற்கு முரணாக வெளியேயுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு 02 நிறுவனங்களால் 41 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 73,604,535 தொகையான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2016 பெப்ரவரி 16 ஆந் திகதிய 431(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் கேகாலை மாவட்ட கபடிக் குழுவின் ஈரான் சுற்றுலாவிற்காக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்படாத நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரி ரூபா 1,936,000 தொகையான விமானப் பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (iii) | 2015 மே 15 ஆந் திகதிய மு.அ 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | அழைப்பு விடுக்கும் நிறுவனத்தினால் வழங்கும் வசதிகள் உறுதிப்படுத்தப்படாமல் பிரதம அமைச்சர் மற்றும் பிரத்தியேக செயலாளர் என்போர் பங்குபற்றிய 05 வெளிநாட்டு சுற்றுலாவிற்கான இணைந்த படிகள் மற்றும் அமையக் கொடுப்பனவாக ரூபா 2,702,447 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஊ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சுற்றறிக்கை<br>2001 மார்ச் 28 ஆந் திகதிய நிதி 01/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல், மரணித்தல் அல்லது அவசரமாக கலைத்தல் போன்ற சந்தர்ப்பங்களின் போது செலுத்த வேண்டிய சகல கடன் தொகையும் ஒரே தடவையில் முழுமையாக அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், பதவி வறிதாக்கப்பட்ட உறுப்பினருக்குரிய ரூபா 208,040 கடன் மீதி 2015 செப்தெம்பர் 27 ஆந் திகதி முதல் நிலுவையாகக் காணப்பட்டது. |
| (எ) ஏனைய சுற்றறிக்கைகள் | |
| (i) 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 07/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிக் கைநூலின் 14.3.1 மற்றும் 15.2 உபபிரிவுகள் | நிவித்திகல மற்றும் எம்பிலிபிட்டிய வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய 274 பாடசாலைகளிலிருந்து 110 பாடசாலைகள் குறித்த பிரகாரம் நான்கு மாத கணக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) 2006 மார்ச் 18 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 2006 ஒக்தோபர் 23 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அதிமேதகு சனாதிபதியின் கடிதம் | பிரதம அமைச்சருக்கு இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் ஒரு பாதுகாப்பு வாகனம் மாத்திரம் ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 09 உத்தியோகபூர்வ வாகனங்களும் மூன்று பாதுகாப்பு வாகனங்களும் அவரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட 05 மேலதிக வாகனங்களினதும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 2015 சனவரி முதல் 2017 செப்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 5,103,493 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஏ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>1.2(அ) மற்றும் (இ) வழிகாட்டிகள் | மாகாண வீதி அமைச்சினால் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட்ட ஒரு வேலையாக நிறைவேற்ற முடியுமாக இருந்த வேலைகளின் பெறுமதி ரூபா 17,732,885 தோகையான |

05 வேலைகள் பகுதிகளாக்கப்பட்டு 10 வேலைகளாக அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டவாக்கம் 44(1) ஆம் பிரிவு

சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களினதும் எண்ணிக்கை பதிவாளரினால் அல்லது அதற்கான ஆவணங்கள் மூலமான சாதாரண அல்லது கட்டளையொன்றின் மூலம் அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட நபரை வருவித்தேனும் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், இரத்தினபுரி மாவட்டத்திற்குரிய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய 35 சங்கங்கள் என்பவற்றின் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்குகளின் கணக்காய்வு தாமதமாகக் காணப்பட்டது.

## 03. வருமான முகாமைத்துவம்

### கடந்த 05 ஆண்டுகளது வருமான அமைப்பு

கடந்த 05 ஆண்டுகளின்போது மாகாண சபையால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் பின்வருமாறு.

| ஆண்டு | வரி வருமானம் | வரி அல்லாத வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2012 | 2,007,749,583 | 496,404.402 |
| 2013 | 2,163,127,948 | 496,200,284 |
| 2014 | 2,394,497,366 | 676,362,034 |
| 2015 | 2,832,257,548 | 725,367,341 |
| 2016 | 3,214,934,104 | 875,031,415 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபரகமுவ மாகாண நிதி விதிக் கோவையின் 41.1.4 ஆம் விதியின் பிரகாரம் இயலுமான வரையில் சரியாக தமது மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு வருமானக்

கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், காணி ஆணையாளர் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட காணி வாடகை வருமானம் மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட வருமானங்களின் கூட்டுமொத்தத்தை 2017 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது 20 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரியதாக 22 சதவீதம் முதல் 651 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காணி ஆணையாளர் திணைக்களத்தால் அறவிடப்படாதிருந்த காணி வாடகை வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 22,421,561 ஆகும்.

(இ) மீளாய்வாண்டினது வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கையில் முன்னைய ஆண்டின் உள்ளவாறான வருமானம் தொடர்பாக கவனம் செலுத்தாமையின் காரணமாக 09 வருமானம் குறியீடுகளுக்குரியதாக ரூபா 445,487,389 இனால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் விஞ்சியிருந்தது.

## 04. நிதி மீளாய்வு

### 4.1 நிதி பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரத் 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 1,110,094,728 ஆக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,816,974,306 ஆகும்.

### 4.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நிகழ்வுகள்

வெளி நார்களால் 17 மாகாண சபை அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பவற்றிற்கு எதிராக 132 சட்டரீதியான நிகழ்வுகளும் 02 அமைச்சுக்கள் / திணைக்களங்களால் வெளி நபர்களுக்கு எதிராக 97 சட்டரீதியான நிகழ்வுகளும் 2017 திசெம்பர் மாதமளவிலும் விசாரணை செய்யப்பட்டவாறிருந்தன.

## 05. அதிகாரசபைக் கணக்குகள்

### 5.1 நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நிதி விதி 560 மற்றும் 561 இன் பிரகாரம் ரூபா 34,988,580 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களுக்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபரகமுவ மாகாண சபையின் 1990 இன் 04 ஆம் இலக்க நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபை சட்டவாக்கம் மற்றும் 2017 இன் 14 ஆம் இலக்க நிர்மாண அபிவிருத்தி

அதிகாரசபையின் புதிய சட்டவாக்கத்தின் 14 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிகள் எதுவும் அதிகாரசபையின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(இ) 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையிலான காலஎல்லை முதல் கொண்டுவரப்படுகின்ற 35 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,360,387 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கட்டிடத்தை வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த ரூபா 577,500 தொகை தவிர வருமானம் உழைக்கின்ற வேறு எந்தவொரு செயற்பாடும் வெறலுப்ப கைப்பணி நிலையத்தால் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) பலவின்ன முற்கலவை கொங்கிறீட் தளத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திக்காக கல், மணல், சீமெந்து மற்றும் கம்பி பயன்படுத்தப்பட்ட உள்ளபடியான உள்ளீடுகளை அவற்றில் நியமத்தின் உள்ளீடுகளுடன் ஒப்பீடு செய்த போது நியமத்தின் பிரகாரம் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டிய உள்ளீடுகள் அந்த வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதாவது 2017 ஆம் ஆண்டில் உற்பத்திகளுக்குரிய சீமெந்து 16,365 கிலோகிராம் ஆகவும், மணல் 329 கன அடிகளும், ¾ கற்கள் 1,237 கன அடிகளும், மி.மீ 6, 10 மற்றும் 12 கம்பி கிலோகிராம் 2,851 அளவும் தொகையும் குறைத்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2017 இன் 19 ஆம் இலக்க நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபை சட்டவாக்கத்தின் 13(ஈ) பிரிவின் மூலம் அதிகாரசபையின் பதவியணியினருக்கு தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் உரித்தற்றதாக சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. எனினும், 13(உ) பிரிவின் பிரகாரம் பதவியணியினருக்காக பணி நடைமுறை விதிகள் எதுவும் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 07 பொருள் வகைகளின் விற்பனை விலை, அவற்றின் உற்பத்திக் கிரயத்தை விட குறைவடைந்தமையால் ரூபா 19,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதிகாரசபையினால் கிரயத்தில் 25 சதவீத இலாபமொன்றைச் சேர்த்தல் புதிய இலாபக் கொள்கையின் அடிப்படையில் இந்த 07 பொருள் வகைகளுக்காகவும் இழக்கப்பட்ட இலாபம் ரூபா 297,751 ஆகும்.

(ஏ) நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டு 27 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் சம்பள முறைமை என்பன தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் அத்தியாயத்தின் (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஊழியரின் மாதாந்த மொத்த உழைப்பின் அடிப்படையில் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய போதிலும் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புப் பணம்

செலுத்தப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,430,190 தொகை குறைத்துச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆவது அத்தியாயத்தின் (1) ஆவது பிரிவின் பிரகாரம் ஊழியரின் மாதாந்த மொத்த உழைப்பின் அடிப்படையில் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டமையால் அதிகாரசபையின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 603,351 தொகை குறைத்துச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உத்தியோகபூர்வ வீடொன்றில் குடியிருந்து மரணித்த உத்தியோகத்தர் ஒருவரின் மனைவியால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மரணமடைந்த கணவருக்காக அவருக்கு உரித்தாக வேண்டிய சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டு அந்த இல்லத்தினை அதிகாரசபை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பான சரியான மேற்பார்வை இடம்பெறாமையின் காரணமாக வீட்டிற்கு உட்செல்லும் வீதியின் ஒரு பகுதியை பயன்படுத்தி அயலிலுள்ளவரினால் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டடிருந்தது.

## 5.3 சபரகமுவ மக்கள் போக்குவரத்து அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4(1) வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய காப்பீட்டின் அடிப்படையின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 20 சதவீதம் ஆகக்கூடிய வேலை ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக 02 சந்தர்ப்பங்களில் காப்பீடொன்றைப் பெற்றுக் கொள்ளாமல் 40 சதவீதம் மற்றும் 55 சதவீதம் கூட்டுமொத்தமாக ரூபா 331,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மிகைப் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதும், நாளாந்த நிதி தேவைக்காக அந்த வைப்பை பிணையாக வைத் ரூபா 14,445,000 கடன் பெறப்பட்டு இருந்ததுடன் வைப்புக்களுக்காக கிடைக்கின்ற வட்டியை விட அதிக சதவீதத்தில் கடனுக்காக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 07 சந்தர்ப்பங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 168,475 தொகையான வேலைக்காக மதிப்பீடு தயாரிக்கப்படாமலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசு இன்றியும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண சபையினால் ரூபா 7,842,100 செலவிட்டு அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட கடைகளின் உரித்து கையேற்கப்படவில்லை.

(உ) அதிகாரசபையின் பிரதான நோக்கங்களுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,166,550 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண சபையால் 2015 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமான வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக அடையாள அட்டையினை அச்சிடுவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 54,055 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்கான நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் குழுவின் அங்கீகாரமும் காணப்படவில்லை. அதற்குரிய பெறுகை நடைமுறைகளைப் பரீட்சித்த போது போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் கொடுப்பனவிற்காக நிதிப்பிரமாணம் 115 இன் கீழ் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 நவம்பர் 02 ஆந் திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பணிப்பாளர் சபைக் குறிப்பின் மூலம் ஒரு செலவினம் இரண்டு தடவைகள் முன்மொழிவு செய்யப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபைக்கு சரியான தகவல்களைச் சமர்ப்பிக்காது ரூபா 286,290 வாகன வாடகைச் செலவினம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2016 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தனியார் கராஜொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) அதிகாரசபைக்குரிய கேகாலை பேரூந்து நிலையத்தில் 30 கடைகளுக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

## 6.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிவித்திகல வலயத்தில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களுக்காக செயலமர்வுகளை நடாத்துவதற்காக 2013 - 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முறையே ரூபா 2,212,177 தொகை மற்றும் ரூபா 1,756,325 தொகைகள் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் காலப்பகுதியில் ஆங்கிலம் சித்தியடைந்த சதவீதம் 27 - 29 வீச்சிற்கு இடையிலும் கணிதத்தில் சித்தியடைந்த சதவீதம் 50 - 55 இற்கு இடையிலான வீச்சிலும் காணப்பட்டது.

(ஆ) அறிவை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைக் கல்வி முறைமையொன்றை தயாரிக்கும் ஆரம்ப செயற்திட்டத்திற்காக (TSEP) பலாங்கொடை கல்வி வலயத்திற்காக தயாரிக்கப்பட்ட 2017 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 16,682,000 தொகையான 230 நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 8,805,443 தொகையான 116 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிக்கவில்லை. பிரிவெனாக் கல்வியை வலுப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட 07 நிகழ்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2014 - 2018 திட்டத்தின் பிரகாரம் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றை முன்னேற்றுதல் ஒரு நோக்கமாக இருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 100 புள்ளிகளை அடைந்து கொள்ளும் முன்னேற்றம் 70 சதவீதம் 58 சதவீதம் வரை சீராகக் குறைவடைந்திருந்தது.

## 6.2 நிலைபேறான அபிவிருத்தி

---------------------------------------------

மாகாண சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்காகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும் போது அடையப்பட வேண்டிய நோக்கங்கள் சிலவற்றுக்குரிய 05 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தன. நோக்கங்கள் சரியாக கண்டறியப்படாமையின் காரணமாக இது தொடர்பாக வரும் இலக்குகள், அடிப்படையான தரவுகள், இலக்குகள் அடையப்பட வேண்டிய கட்டங்கள் போன்ற செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்து பார்ப்பதற்கான குறிகாட்டிகளையும் போதியளவான பிரகாரம் இனங்காண முடியாதிருந்தது. அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை போதியளவான பிரகாரம் தெளிவுபடுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 அமைச்சுக்கள், 04 திணைக்களங்கள் மற்றும் மாகாணக் கல்வி திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 86 பாடசாலைகள் என்பவற்றில் ஏற்பட்டிருந்த ரூபா 9,192,673 கூட்டுத்தொகையான நட்ட இழப்புக்கள் தொடர்பாக மாகாண நிதி விதி 54 மற்றும் 55 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீட்டு உதவி வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 24,983,650 தொகையும், நிர்மாண மானியமாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,016,797 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் சகல பிரதிபலன்களும் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

(இ) 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 20/2007 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக 04 வலயங்களில் 2,360 ஆசிரியர்கள் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஒரே பாடசாலையில் சேவையாற்றிக் கொண்டிந்ததுடன் அவற்றில் 20 வருட சேவைக் காலத்துடன் 338 ஆசிரியர்கள் உள்ளடங்கியிருந்தனர். அவ்வாறான ஆசிரியர்கள் தொடர்பான தகவல்கள் பலாங்கொடை, இரத்தினபுரி மற்றும் மாவனல்லை வலய அலுவலகங்களிருந்து சரியான முறையில் வழங்கப்படவில்லை.

(ஈ) மாகாண காணி, விவசாய அமைச்சினால் பயிற்சி மற்றும் இயளலவு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 22,492,500 தொகையான நிதிஏற்பாடு இந்த நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் செலவிடப்படாமல் 750 விவசாய விற்பனைக் கூடாரங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் 2017 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாத ரூபா 1,229,590 கூட்டுப்பெறுமதியான 41 விவசாய விற்பனைக் கூடாரங்கள் பௌதீக பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. நலனாளிகளை தெரிவு செய்தல் வெளிப்படையாக மேற்கொள்ளப்படாமையின் காரணமாக சரியான தேவைகளுடன் உள்ள நபர்களுக்கு நியாயமான அடிப்படையில் பகிர்ந்தளிப்புக்கள் இடம்பெற்றனவா என உறுதிப்படுத்தப்படவில்லை.

(உ) ‘‘சுந்தர சபரகமுவ பொத்த’’ (ஆங்கிலம்) மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடுவதற்காக மாகாண வீதி அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 777,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு 2016 ஏப்ரல் 07 ஆந் திகதியன்று அச்சிடல் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 சனவரி 16 ஆந் திகதியளவிலும் அச்சிடல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

(ஊ) மாகாண வீதி அமைச்சின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வீதி நிர்மாணங்கள், பராமரிப்பு மற்றும் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக மொத்த நிதிஏற்பாட்டில் 70 சதவீதத்தை விஞ்சி இரத்தினபுரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், கேகாலை மாவட்டத்திற்கான நிதிஏற்பாடு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிபிட்டிய பிரதேச செயலக பிரிவிற்காக மாவட்ட நிதிஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கு அண்ணளவாகவும், கேகாலை மாவட்டத்தின் றம்புக்கனை பிரதேச செயலகப் பிரிவிற்காக மாவட்ட நிதிஏற்பாட்டில் 40 சதவீதத்திற்கு அண்ணளவாகவும் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தன. இவ்வாறே வருடாந்த நிதிஏற்பாடு பாகுபாட்டுடன் ஒதுக்கப்பட்டமையினால் சபரகமுவ மாகாணம் அபிவிருத்தியிலிருந்து விலகிச் செல்வதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் திணைக்கள வளவில் மூலிகைப் பூங்காவை ஸ்தாபிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 225,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் முறையான நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரமும் சரியான மேற்பார்வையின் கீழும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக 2018 பெப்ரவரி வரையிலும் நோக்கங்களை அடைய முடியாதிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் வியட்நாமுக்குச் சென்ற சுற்றுலாவிற்காக பெறப்பட்ட படிகள் வழுக்களுடன் கூடியதாக இருந்ததாக ஏற்றுக்கொண்ட 12 உத்தியோகத்தர்களினால் அவர்களால் பெறப்பட்ட ரூபா 4,191,875 தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், பிரதம அமைச்சர், அவரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் 02 உத்தியோகத்தரிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 976,000 தொகை மேலும் அறவிட வேண்டி இருந்தது.

(ஐ) 2017 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் (i) மற்றும் (ii) ஆம் பந்திகளின் பிரகாரம் பதிலால் ஒருவரை நியமிப்பதற்கு வசதியில்லாமலும் பதில் கடமை மாற்று வழியின் மூலம் தற்போது சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிறைவேற்றிக்கொள்ள முடியாதுள்ள போதும் தேவையான பதவிகளுக்கு மாத்திரம் உரிய அமைச்சு செயலாளரால் தனிப்பட்ட சிபார்சின் அடிப்படையில் 60 வயதை விஞ்சிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் 12 மாத உச்ச அடிப்படையின் கீழ் உரிய அதிகாரத்தரப்பினருக்கு நியமிக்க முடியும் அவ்வாறே அதன் (v) ஆம் பந்தியின் பிரகாரம் அந்தக் கால எல்லையில் நிறுவனத் தலைவரால் பொருத்தமான பதிலால் இனங்காணப்பட வேண்டிய போதிலும், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக சபரகமுவ மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு பணிப்பாளர் பதவிக்காக 60 வயதை விஞ்சிய ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட நான்கு சந்தர்ப்பங்களின் போதும் நியமித்தல் காலம் 4 ½ வருடம் வரை அமுலில் இருந்தது.

## 6.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2016 யூலை 27 ஆந் திகதி நடைபெற்ற சபரகமுவ மாகாண விசேட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கூட்ட அறிக்கையின் பிரகாரம் உக்காத கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு வசதிகளற்ற உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு களஞ்சிய வசதியை வழங்குவதற்காக கட்டிடங்களை நிர்மாணித்து வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் 12 நிறுவனங்களுக்காக 2018 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 ஔடத முகாமைத்துவம்

இரண்டு வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் என்பவற்றில் காணப்பட்ட காலாவதியான மற்றும் தரக் குறைவான 378,974 அலகு மருந்துகளை அகற்றாமல் களஞ்சியத்தில் சேமித்து வைத்திருந்ததுடன் ஒரு ஆதார வைத்தியசாலையில் 01 வருடத்திற்கும் 10 வருடத்திற்கும் இடையிலான காலம் காலாவதியாகி இருந்த 34 வகைகளுக்குரிய 20.67 கிலோகிராம் இரசாயனப் பொருட்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

## 6.6 செயற்பாட்டு செயற்றிறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் வருடாந்த பயிற்சி திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் 100 பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் திட்டமிடப்பட்ட 22 செயலமர்வுகளுக்கும், வேறு 43 செயலமர்வுகளுமாக 65 செயலமர்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டு இருந்தன. 5,440 உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பயிற்சி அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கை 1,666 ஆக இருந்தது. அவ்வாறே செயலமர்வை நடாத்தும் காலப்பகுதி, திட்டம் தயாரிக்கும் போது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 9,418,041 செலவில் இசைக்கருவித் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதில் கூட்டுமொத்தமாக ரூபா 1,592,640 தொகையான 36 இயூபோனியம் கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் மாதத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் வரையிலும் அந்தப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பரில் கிடைத்த ரூபா 7,825,401 தொகையான மிகுதிப் பொருட்களின் இருப்பு 2018 சனவரி வரையிலும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாதிருந்ததுடன் பொருட்களின் உத்தரவாதக் காலம் 02 வருடங்கள் ஆனமையால் அவற்றை பயன்படுத்துவதற்கு முன்னரே ஒரு வருடம் களஞ்சியத்தில் வைத்திருந்தே முடிவடைந்திருந்தது. அதற்கு மேலதிகமாக இந்தப் பொருட்களின் தரப் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 12 மாதங்களை எடுத்திருந்த போதிலும் அதற்கான காரணம் ஆராயப்பட்டிருக்கவில்லை.

(இ) மாணவர்கள் குறைவடைந்தமை மற்றும் இயற்கை மரணங்களின் அடிப்படையில் 1992 - 2018 காலப்பகுதியில் சபரகமுவ மாகாணத்தின் 130 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தது. அதில் 57 பாடசாலைகள் பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் 05 பாடசாலைகள் ஏனைய நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. 17 பாடசாலைகளின் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் எதுவும் நிறுவனத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் 42 பாடசாலைகளில் காணி மற்றும் கட்டிடங்கள் எதுவும் பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்றுக் காணப்படுகின்ற காலப்பகுதி 02 - 18 வருடங்களுக்கிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஈ) கேகாலை கல்வி வலயத்தில் அமைந்துள்ள 52 ஆசிரியர் விடுதிகளில் 14 விடுதிகளில் மாத்திரம் உத்தியோகத்தர்கள் குடியிருந்து வருவதுடன் 11 விடுதிகள் அந்தப் பாடசாலைகளின் ஏனைய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. 03 விடுதிகள் உடைத்து அகற்றப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 04 விடுதிகள் பழுதுபார்க்கப்படுகின்றது. அவ்வாறே 20 விடுதிகள் 02 தொடக்கம் 20 வருடங்கள் வரையிலான வீச்சில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 இன் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கையொன்றை மேற்பார்வை செய்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்காக திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் ஊடாக ரூபா 50,000 கடன் தொகை வழங்கப்பட்டிருந்த 63 உள்ளூராட்சி பிரதிநிதிகள் கடன் பணத்தை செலுத்தாது புறக்கணித்திருந்ததுடன் 2018 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நிலுவை மீதி ரூபா 873,951 ஆக இருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 50,000 சலுகைப் பணம் ஒரே தடவையில் செலுத்தும் அடிப்படையில் மோட்டார் சைக்கிளைப் பெற்றிருந்த 37 பொதுமக்கள் பிரநிதிகளிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 1,850,000 தொகையினை அறவிடுவதற்கு 2018 பெப்ரவரி வரையிலும் முடியாதிருந்தது.

(ஊ) வரக்காபொல சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவில் 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் முறையான மலசலகூட வசதிகளற்ற 171 குடும்பங்களும், எந்த ஒரு மலசலகூடமும் இல்லாத 435 குடும்பங்களும் வசித்திருந்த போதிலும், அவர்களுக்கான சுகாதார வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மாகாண காணி, விவசாய அமைச்சினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 22,432,350 செலவில் 5,715 ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 709,250 தொகையான 225 ஹியூம் குழாய்கள் விவசாய அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் கமநல சேவை நிலையங்களில் வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே விவசாய அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 321,250 தொகையான 66 ஹியூம் குழாய்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது வீடுகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 43,430 தொகையான 07 ஹியூம் குழாய்கள் விவசாய அமைப்புக்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஏ) மின்பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அல்லது அதற்கு ஒத்ததாக மின்பிறப்பாக்கி இயந்திரத்தை வைப்பதற்கு பொருத்தமான இடம் இனங்காணப்பட்டு அதற்குத் தேவையான கட்டிட வசதி மற்றும் மதிப்பீடு போன்றவை தயாரிக்கப்படாமையினால் ரூபா 8,400,000 கிரயத்தை செலவிட்டு கரவனெல்ல ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரம் 01 வருடமும் 06 மாத காலமும் வரை விளைவற்றுக் காணப்பட்டது.

## 6.7 மாகாண வீதி அபிவிருத்தியும் மேம்படுத்தலும்

---

மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டின்போது நிர்மாணிக்கப்பட்டிருந்த மாகாண வீதிகள் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொரத்தொட்ட கெட்டேதென்ன வீதியில் 4.7 கிலோமீற்றருக்கு காப்பட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 115,057,000 பெறுமதியில் 2016 திசெம்பர் 07 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நிர்மாண நடடிவடிக்கைகளை ஆரம்பித்தல் 02 மாதங்களினால் தாமதமாக இருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய இந்த வேலையில் 30 சதவீத அளவு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 2017 நவம்பரில் நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி வரையிலும் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 06 வேலைகளுக்காக செலுத்த வேண்டிய பெறுமதியை விஞ்சி கூட்டுமொத்தமாக ரூபா 5,073,839 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்தி முடிக்கப்பட்ட 20 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 300,000 பெறுமதியான 20 பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 மே 12 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட கிராம மத்திய வீதி முதல் கிவுல ஆற சந்தி வரையான வீதிக்கு கொங்கிறீட் இடும் செயற்திட்டத்தின் 101.70 கொங்கிறீட் கனமீற்றருக்காக ரூபா 1,508,292 செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதியின் ஆரம்ப இடத்திலிருந்து 200 மீற்றருக்குள் வீதியின் மேற்பரப்பில் கொங்கிறீட் படை முழுமையாக கழன்று ¾ அங்குல கல் குவிந்து காணப்பட்டமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) இஹல வெலிக்கடை முதல் வெவேந்த வீதிக்கு கொங்கிறீட் இடுவதற்கு முன்னர் வீதியின் அடிப்பகுதியை அமைப்பதற்கான இரண்டு வேலை விடயங்களின் கீழ் ரூபா 234,179 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதியின் அடிப்பகுதி உரிய நியமத்துடன் நிர்மாணிக்கப்படாமையினால் 215.2 மீற்றர் நீளமான ஒட்டுமொத்த வீதியினதும் கொங்கிறீட் படை நீளப் போக்கில் வெடித்திருந்தது. அவ்வாறே முழு வீதியினதும் மேற்பரப்பில் கொங்கிறீட் படை கழன்றமையால் கொங்கிறீட்டுக்காக பயன்படுத்தப்பட்ட ¾ அங்குல கல் குவிந்து காணப்பட்டது.

(ஊ) 2017 யூலை 20 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட 212 மீற்றர் நீளமான உடவல மூதுன்மங்கட வீதியின் ஒரு வேலை விடயத்தின் கீழ் 95.40 கனமீற்றர் கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 1,414,858 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒட்டுமொத்த வீதியின் மேற்பரப்பிலும் கொங்கிறட் படை முழுமையாகக் கழன்று கொங்கிறீட்டுக்காக பயன்படுத்தப்பட்ட ¾ அங்குல கல் குவிந்து காணப்பட்டது.

(எ) 2016 செப்தெம்பர் 12 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட துங்கம சந்திரிக்காறாம வீதியில் ஒரு வேலை விடயத்தின் கீழ் 120.15 கனமீற்றர் கொங்கிறீட்டுக்காக ரூபா 1,677,714 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பன்சல பக்கத்திலிருந்து வீதி ஆரம்ப திசைக்கு 100 மீற்றருக்குள் வீதியின் 03 இடங்களில் 5 மீற்றர் அளவிலான குறுக்காக வெடித்துக் காணப்பட்டதுடன் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 13 மாதங்கள் கழிவதற்கு முன்னரே வீதியின் மேற்பரப்பில் கொங்கிறீட் படை கழன்று போடப்பட்ட ¾ அங்குல கல் குவிந்து காணப்பட்டது. மேலும், பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் கலவையின் உள்ளடக்கத்தின் இயல்பு வெளிப்பட்டிருந்தது.

(ஏ) கஹவத்த - கட்டன்கே ஊடாக தெல்கஸ் சந்தி வரையான வீதிக்கு காபட் இடப்படாத மூன்று இடங்களின் வீதிகள் மிகவும் மோசமாக பழுதடைந்திருந்ததுடன் வீதியின் மேற்பரப்பில் நீர் தேங்கி காணப்பட்டமையால் வாகனங்களின் போக்குவரத்து மிகவும் அபாயகரமான நிலையில் காணப்பட்டமையால் 2017 ஒக்தோபர் மாதத்தில் மாவட்ட மோட்டார் வாகன குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வீதியைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 13,446,000 தொகையான மதிப்பீடு ஒன்று 2017 திசெம்பர் மாதம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 சனவரி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கனேகம தெனவக வீதிக்கு 752.19 கனமீற்றருக்கு காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,181,321 பெறுமதியான செயற்திட்டத்தின் தரத்தை பரீட்சித்து அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 20,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தரப் பரிசோதனை அறிக்கை பெறப்படாமல் ரூபா 2,965,592 தொகையான ஆற்றப்பட்ட வேலை நிறைவேற்று பொறியியலாளரால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மஹவலதென்ன வலவ்வ வீதி திருத்தத்தின் பின்னர் வீதி நுழைவிலிருந்து 2.2 கிலோமீற்றர் இடத்திலிருந்து 2.3 கிலோமீற்றர் வரையிலான 100 மீற்றர் அளவான வீதி முழுமையாக வெடித்திருந்த போதிலும், ரூபா 190,817 தொகையான நிறுத்தி வைத்தல் பணத்தைப் பயன்படுத்தி அதனைத் அமைப்பதற்கு 2017 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபரகமுவ வணிக மற்றும் கைத்தொழில் சபையின் மூலம் வருடாந்தம் தொழில்முயற்சியாளருக்கு 2017 ஆம் ஆண்டில் விருது வழங்கும் விழாவிற்காக ரூபா 1,000,000 நிதிரீதியான அனுசரணையொன்று மாகாண கைத்தொழில் அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அத்தொகை வணிக சபையால் கோரப்பட்ட வேண்டுகோள் கடிதம் மற்றும் முறையான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட செலவின மதிப்பீடொன்றின் அடிப்படையில் இறுதிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறான நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 600,000 நிதிசார் அனுசரணை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண அமைச்சருக்கு மாகாண சபையின் மூலம் வழங்கப்பட்டிருந்த சகல சொத்துக்களும் மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மீளவும் மாகாண சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதம அமைச்சரை உள்ளடக்கிய மாகாண சபை பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,160,280 கூட்டுப்பெறுமதியான 58 உபகரணங்கள் 2017 நவம்பர் வரையிலும் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊக்குவிப்புப்படி நிதிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஊக்குவிப்புப்படி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 1994 ஆம் ஆண்டு முதல் 22 வருடங்களின் கணக்குகள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது. இதனால் கடந்த 22 வருடங்களிலும் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அவற்றின் கணக்கு வைத்தல்கள் தொடர்பாகவும் 2017 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தொகையின் ஆரம்ப மீதிகளின் சரியான தன்மை தொடர்பாகவும் தொடர்ச்சியாக மீளாய்வாண்டு வரை

முன்கொண்டுவரப்பட்ட சகல ஆண்டுகளினதும் ஆரம்ப மீதிகளினதும் சரியான தன்மை தொடர்பாகவும் நியாயமான உறுதிப்படுத்தலைப் பெறமுடியாதிருந்தது.

(ii) 2016 பெப்ரவரி 25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க சேவையின் சம்பளத் திருத்தம் 2016 - சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 3,677,966 தொகையான ஊக்குவிப்புப்படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**6.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண வீதி அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் இனங்காணப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,893,620 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்டதன் பிரகாரம் அந்த வேலைகள் உரிய இடங்களில் அமுல்படுத்தப்படவில்லை. அந்த வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு, ஏனைய மூன்று இடங்களில் நிர்மாண அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் கூறப்பட்டிருந்த போதிலும், அந்த திருத்தங்கள் தொடர்பாக எந்தவித ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளும் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய அரசிற்குரிய திணைக்களங்களிலிருந்து முன்மொழியப்படுகின்ற நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஆலோசனைக் கட்டணமாக 4.5 சதவீதம் பெற்றுக்கொள்வதற்கும், அந்த வேலைகளுக்காக நேரடியாக பங்களிக்கின்ற பொறியலாளர் சேவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையில் செலுத்துவதற்கு பிரதம செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவு செய்தல் தொடர்பாக தேவையான பிரதான விடயங்கள் அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமையின் காரணமாக செலுத்தப்பட்ட ஆலோசனைப் படியை பரீட்சிப்பதற்குரிய கணக்காய்வு விடயப்பரப்பு வரையறையாக இருந்தது.

(இ) முன்னாள் பிரதம அமைச்சரால் 2017 சனவரி முதல் 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலான கால எல்லையில் மேற்கொள்ளப்பட்ட 04 வெளிநாட்டு சுற்றுலாக்களின் போது ஞாபகச் சின்னங்களைக் கொண்டு செல்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,238,545 தொகை மாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ஈரான் தேசிய கபடிக் குழுவின் சபரகமுவ மாகாண சுற்றுலாவிற்காக தொடர்புடையவரின் பெயருக்கு நேரடியாக காசோலை விநியோகிக்கும் இயலுமை காணப்பட்ட ரூபா 1,947,860 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக முற்பணமாக பணம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த முற்பணம் மூலம் 31 விளையாட்டு வீரர்களுகடு 07 நாட்கறைக்கான உணவு, பானம் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக கூறுவிலை கோராமல் தெரிவு செய்யப்பட்ட

தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 1,295,200 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் சுற்றுலாவிற்கு உரித்தாகாத செலவினங்களாக கூட்டுமொத்தமாக ரூபா 264,700 செலவிடப்பட்டிருந்தது.

(உ) மாகாண வீதி அமைச்சரின் விழா மற்றும் மக்கள் சந்திப்பிற்காக 10 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட உபசரிப்புச் செலவினம் மற்றும் ஹோட்டல் கட்டணங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,684,000 அமைச்சரின் பெயரில் எழுதப்பட்ட காசோலை மூலம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 6.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாகாண சபைக்குரிய பல்வேறு நிறுவனங்களில் ரூபா 32,285,778 பெறுமதியான 14 இயந்திர உபகரணங்கள் 06 வருட காலமாகவும், பெறுமதி கண்டறியப்படாத 11 இயந்திர உபகரணங்கள் 07 மாதம் முதல் 06 வருட காலம் வரையிலான வீச்சிலும், ரூபா 2,931,183 பெறுமதியான கட்டிடம் 02 வருட காலத்திலிருந்தும், பெறுமதி இனங்காணப்படாத வாகனமொன்று 02 வருட காலத்திலிருந்தும் விளைவற்றுக் காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

இரத்தினபுரி மற்றும் மாவனல்ல கல்வி வலயங்களில் அமைந்துள்ள 299 பாடசாலைகளில் 178 பாடசாலைகளில் இறுதியாக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட ஆண்டு தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மிகுதி 05 வலயங்களுக்குரிய 689 பாடசாலைகளில் 340 பாடசாலைகள் 2016 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டிருக்கவில்லை. அது 50 சதவீத அளவைக் கொண்டிருந்தது. அவ்வாறே 02 கல்வி வலயங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளாத பாடசாலைகளின் எண்ணிக்கை 70 ஆகும்.

### (இ) வெளித்தரப்பினர் அனுமதியற்ற வகையில் கைப்பற்றியுள்ள சொத்துக்கள்

மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்குரிய அரச விடுதியொன்று அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியும் கஹவத்த ஆதார வைத்தியசாலைக்குரிய காணியின் பகுதியொன்றும் வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 6.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண வீதி அமைச்சின் ஏற்பாட்டின் அடிப்படையில் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கொழும்ப கே ஆற பாடசாலை விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக வெளியிலிருந்து மண் கொண்டு வந்து நிரப்புதல், சமப்படுத்துதல் மற்றும்

செப்பனிடல் என்பவற்றிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,536,234 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட அபிவிருத்தியின் காரணமாக விளையாட்டு மைதானம் காணப்பட்ட நிலைமையை விட தாழ்வடைந்திருந்ததுடன் மழை நீர் நிரம்புதல் மற்றும் மண் கழுவிச் செல்லப்பட்டமையின் காரணமாக விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. அதன் காரணமாக ஏற்பட்ட ரூபா 1,969,287 செலவு பயனற்றதாக இருந்தது.

(ஆ) ஆளுநர் அலுவலகத்துக்குரிய பூரண காப்புறுதியொன்றைப் பெற்ற வாகனமொன்று 2016 மே 08 ஆந் திகதி விபத்துக்குட்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட இழப்பை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்காக ஏற்பட்ட செலவு ரூபா 620,000 இனை மீளளிப்புச் செய்தல் காப்புறுதி கம்பனியால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.12 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண வீதி அமைச்சினால் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட திமோல்கெட்டிய பாடசாலை விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திக் கட்டம் I செயற்திட்டத்திற்காக விவசாயச் சங்கத்திற்கு ரூபா 1,986,576 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டிடத்தின் கீழ் விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதம அமைச்சரின் மூலம் பல்வேறு சமய விழாக்களுக்காக விகாரைக்கு வழங்கப்பட்ட ரூபா 8,338,450 தொகையான நன்கொடைகளிலிருந்து 20 சதவீதத்தை தெரிவாக எடுத்து, அதாவது ரூபா 1,700,000 கொடுப்பனவின் பரீட்சிப்பின் போது ரூபா 1,335,000 தொகை உரிய விகாரைகளுக்கு கிடைத்திருக்கவில்லை. அது தெரிவு செய்யப்பட்ட மாதிரியில் 78 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

(இ) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் கூரையைத் திருத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்காக பிரதம அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 150,000 தொகையான காசோலை அமைச்சின் அலுவலக ஊழியரால் போலியாக ஆவணங்கள் தயாரித்து பெறப்பட்டிருந்தது.

### 6.13 பயனற்ற செலவினம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சூரிய வலுசக்தி மூலம் மின்சாரத்தை பரவலாக்கும் செயற்திட்டத்திற்காக கைத்தொழில் அமைச்சினதும், கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினதும்

சில உத்தியோகத்தர்கள் சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தனர். எனினும், அதில் எதிர்பார்த்த தொழில்நுட்ப இயலுமையை பெற்றுக்கொள்ளல், பயிற்சிகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு நேரடியான இறக்குமதி போன்றவற்றின் காரணமாக எதுவும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அதன் பின் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள 05 நிறுவனங்கள் சூரிய வலு சக்தி தேவையை உள்நாட்டு நிறுவனத்திலிருந்து பூர்த்தி செய்வதற்கு ரூபா 5,833,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 6,891,189 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஆ) சபரகமுவ மாகாண சபை கட்டிடத் தொகுதியில் 2017 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு சேவைக்காக மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரல் நியாயமான காரணமின்றி இரத்துச் செய்யப்பட்டமையினால் செய்திப் பத்திரிகை அறிவித்தல்களுக்காக செலவிட்ட ரூபா 115,575 தொகை பயனற்றதாக இருந்தது. 2016 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவை வழங்கிய நிறுவனத்தால் 2017 ஆம் ஆண்டிற்காகவும் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அதனை விட குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த 05 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும், மேற்கூறப்பட்ட இரத்துச் செய்தலினால் 2018 மார்ச் வரையிலும் ஒப்பந்தக் காலத்தை நீடித்து அந்த நிறுவனத்திலிருந்தே சேவை பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

## 6.14 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபரகமுவ மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 200 இடங்களுக்காக 90 நாள் காலஎல்லையில் பிரயாணிகள் மேவுகை வழங்கி பொருத்துவதற்காக ரூபா 56,700,000 பெறுமதியில் மாகாண பிரதம அமைச்சினால் 2015 திசெம்பர் 30 ஆந் திகதி தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. பெறுகைகள் மதிப்பீடு மற்றும் கையளித்தல், நிர்மாணங்களின் போது ஏற்பட்டிருந்த வழுக்களின் காரணமாக மாகாண நிதியத்திற்கு கூட்டுமொத்தமாக ரூபா 11,015,700 நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2018 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் 15 பிரயாணிகள் மேவுகைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2016 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் முறையான பிரகாரம் காலநீடிப்பு பெறப்படாதிருந்ததுடன் 2018 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் 580 நாள் தாமத காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய தாமத காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 2,349,900 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ற/எம்பி/நின்தகம்பெலெஸ்ஸ விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,970,273 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மண் பரப்புதல் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டமையால் விளையாட்டு மைதானத்தில் மண் கழுவிச் செல்லப்பட்டு பழுதடைந்திருந்ததுடன் விளையாட்டு மைதானத்தை சுற்றி வெடித்திருந்தது. அவ்வாறே நிர்மாணித்தல்களுக்காக ரூபா 353,676 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பலாங்கொடை கல்வி வலயத்தில் 13 பாடசாலைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிட நிர்மாண செயற்திட்டம் மூலம் 2017 திசெம்பர் வரையிலும் ரூபா 3,710,676 தொகை செலவில் முதலாம் கட்டத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட 02 விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்கான இரண்டாம் கட்டத்தின் வேலைகள் அமுல்படுத்தப்படாமையினால் 2018 பெப்ரவரி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு விஞ்ஞான ஆய்வு கட்டிடத்தை ஆறுமாத காலத்தில் நிர்மாணிப்பதற்கு 2015 நவம்பர் மாதத்தில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,179,643 தொகையான 39 வேலை விடயங்கள் 2018 பெப்ரவரி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ‘‘லங்கம பாசல கொந்தம பாசல’’ (அண்மித்த பாடசாலை நல்ல பாடசாலை) செயற்திட்டத்தின் மூலம் ற/தேல மஹா வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 797,590 பெறுமதியான மலசலகூட முறைமை, நீர் வசதிகள் இன்மையின் காரணமாக பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(உ) தெஹியோவிட்ட மாலிபொட தேவானந்த வித்தியாலயத்தின் திருத்தங்களுக்காக ரூபா 206,400 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 729,791 தொகை செலுத்துவதற்காக எவ்வித எழுத்துமூல சான்றுகளும் காணப்படவில்லை. அவ்வாறே பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கில் ரூபா 136,344 தொகை அங்கீகாரமின்றி செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) எம்பிலிபிட்டிய ஆரம்ப பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் பக்கச்சுவர் அபிவிருத்தி செய்யும் வேலைக்காக அங்கீகரிக்கப்பட்ட இறுதி பட்டியலின் வேலைப் பெறுமதி மற்றும் 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரையிலும் உள்ளபடியாக பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்காகச் செலுத்த வேண்டிய பெறுமதியை ஆராய்ந்து பார்த்த போது ரூபா 915,431 தொகையான நிறைவேற்றப்படாத வேலைக்காக கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டு 2017 செப்தெம்பர் 04 ஆந் திகதி மாகாண வீதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிர்மாணத்தின் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் சுவரின் அத்திவாரத்திற்கான வேலைப் பெறுமதி ரூபா 98,773 தொகையான 6.66 கனமீற்றருக்கு கொங்கிறீட் இடப்பட்டிருக்கவில்லை. சரியான நியமத்தில் அத்திவாரம் நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக களிமண்ணுடன் உள்ள வயல் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற கற்சுவரின் இருப்பு பிரச்சினைகளுடன் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) சபை செயலகத்திற்குரிய உறுப்பினர் சுற்றுலா பங்களாவின் காணியை அலங்கரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 190,571 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் நிறுவனத்தால் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையினால் இணங்கப்பட்ட வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக உரிய தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது.

**6.15 தாமதமான செயற்திட்டம்**

------------------------------------------

அமைச்சு / 03 திணைக்களங்களினால் அமுல்படுத்தப்பட்டிருந்த 76 நிர்மாண ஒப்பந்தங்கள் பல்வேறு காரணங்களினால் தாமதமாகியிருந்ததுடன் ஒரு திணைக்களத்தின் 20 நிர்மாண ஒப்பந்தங்கள் ஆரம்பிக்கப்படாமல் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

**6.16 போதியளவான பிரகாரம் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------

கொடகவெல பூழுவான கிராமத்தில் 14 களிமண் கைத்தொழிலாளர்களுக்காக வேலைத் தளமொன்றை தயாரிப்பதற்கு ரூபா 974,120 உதவிப்பணம் வழங்கப்பட்டிருந்தது. ஏற்படுத்தப்பட்ட எழுத்துமூல இணக்கப்பாட்டின் பிரகாரம் வேலைத்தளம் எதுவும் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மொத்தக் கிரயத்தில் 50 சதவீதம் நலனாளிகள் பங்களிப்பைச் செய்வதற்கு நலன்பெறுநர்களுக்கு ஏற்படுத்தும் செயற்திட்டத்தின் தோல்விக்கு காரணமாக இருந்தது. அக்கிராமத்தில் காணப்படுகின்ற இயற்கையான களிமண் தளத்திற்கு வீதி வசதிகள் காணப்படாமை கைத்தொழிலாளர்களுக்கு காணப்படுகின்ற சவாலாக இருந்த போதிலும், அதற்கு தீர்வு கிடைத்திருக்கவில்லை.

**6.17 பெறுகைகள்**

--------------------

**வழங்கல் மற்றும் சேவைகள்**

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளுநர் அலுவலகத்திற்குச் சொந்தமான 04 வாகனங்களுக்காக டயர் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் 06 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 955,608 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்குரிய பெறுகை நடவடிக்கைகளின் போது ஏற்பட்டிருந்த வழுக்கள் மற்றும் வெளிப்படையான மோசடிகளின் காரணமாக மாகாண நிதியத்திற்கு ரூபா 223,832 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) 20 ஆவது சர்வதேச சிறுவர் தரச் சம்மேளனத்திற்காக வருகை தருகின்ற வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு வழங்குவதற்காக ஞாபகச் சின்னங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறுகைகள் செயல்வழிக் கோவையின் நடைமுறைக்கு புறம்பாக தனியார் நிறுவனமொன்றிற்கு கூட்டுமொத்தமாக ரூபா 269,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாகாண வீதி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட சபரகமுவ மாகாண சுற்றுலா அபிவிருத்தி சீ.வீ.டீ பட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 877,478 தொகையான ஆகக்குறைந்த கேள்விப் பெறுமதி மதிப்பீட்டுக் குழுவினால் நியாயமான அடிப்படையின்றி நிராகரிக்கப்பட்டு ரூபா 984,000 கேள்விக்காக 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மாகாண நிதியத்திற்கு ரூபா 106,522 நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2018 சனவரி

18 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6.18 மனிதவள முகாமைத்துவம்

### 6.18.1 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை நிர்வாக சேவையின் வருடாந்த இடமாற்ற கட்டளை கவனத்திற் கொள்ளப்படாமல் 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் ஏப்ரல் 05 ஆந் திகதி வரை பிரதம அமைச்சின் செயலாளர் பதவியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தருக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் 2017 ஏப்ரல் 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மாகாண அரசாங்க சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தக் கட்டளைகள் கவனத்தில் கொள்ளப்படாது மாகாண சபையில் தொடர்ந்தும் இருந்த அந்த உத்தியோகத்தரால் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய கெப் வண்டி ஒன்று 2018 யூன் 09 ஆந் திகதி ஓட்டத்தில் ஈடுபடும் போது விபத்துக்குள்ளாகி இருந்தது. அவ்வாறே அந்த விடயங்கள் தொடர்பாக எவ்வித புலனாய்வுகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இடமாற்றக் கட்டளை கவனத்தில் கொள்ளப்படாது பிரதம அமைச்சு செயலாளரின் பதவியில் சேவையாற்றிய காலத்திற்காக சம்பளத்திற்கு மேலதிகமாக கடமை நிறைவேற்றும் படியாக ரூபா 28,260 தொகை மற்றும் 2017 ஏப்ரல் முதல் யூலை வரை ஓய்வூதிய நிதியத்தின் பணிப்பாளர் படியாக கூட்டுமொத்தமாக ரூபா 44,312 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாக விநியோகிக்கப்பட்ட பதவியணியினர் அறிக்கையின் பொது நிபந்தனைகளுக்கு முரணாக இலங்கை நிர்வாக சேவையின் III ஆந் தரத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தரத்தின் பதவியான கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளர் பதவியில் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டு 2013 சனவரி முதல் 2017 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய பதிற்கடமைப் படியாக ரூபா 403,364 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) உந்துகொட மிருகக் கட்டுப்பாட்டு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் 2017 யூலை 28 ஆந் திகதி வரையிலும் பல்வேறு சேவை தொகுதியின் கீழ் உத்தியோகத்தர்கள் மற்றும் 88 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் முறையான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படவில்லை.

### 6.18.2 கல்வித்துறைப் பதவியணியில் மேலதிகமும் குறைவுகளும்

மாகாணக் கல்வித் திணைக்களத்தால் சபரகமுவ மாகாணத்தில் உள்ள ஆசிரியர் தேவைகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட உசிதமான ஆசிரியர்

எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பிரதான பாடங்களில் ஆசிரியர்கள் குறைவாகவும் மேலதிகமாகவும் இருந்தனர். விபரம் வருமாறு.

| | 6-11 இருபாலார் பிரிவு | | | 12-13 உயர் தரப் பிரிவு | |
|---|---|---|---|---|---|
| விடயம் | குறைவு | மேலதிகம் | பாடம் | குறைவு | மேலதிகம் |
| ஆங்கிலம் | 161 | 79 | விஞ்ஞானம் மற்றும் மேலதிக பாடங்கள் | 41 | 24 |
| தொழில்நுட்பப் பாடம் | 633 | 52 | வணிக பாடங்கள் | 33 | 43 |
| விஞ்ஞானம் | 171 | 65 | கலைப் பாடங்கள் | 37 | 163 |
| கணிதம் | 186 | 67 | தொழில்நுட்பப் பாடங்கள் | 35 | 3 |
| ஏனைய பாடங்கள் | 1433 | 334 | | | |

மேலே சமர்ப்பிக்கப்பட்ட விபரம் 2016 ஆம் ஆண்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் மிகைகள் தாடர்பான அறிக்கையொன்று கல்வித் திணைக்களத்தால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 6.18.3 சுகாதாரத் துறைப் பதவியணியின் மேலதிகமும் குறைவும்

சுகாதாரத் துறையின் ஒவ்வொரு சேவையிலும் உள்ள ஊழியர் மேலதிகமும் குறைவும் பல்வேறு நிறுவனங்களது மட்டங்களில் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | | கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கேகாலை மாவட்ட மாகாண மருத்துவ மனைகள் | | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட மாகாண மருத்துவ மனைகள் | | எம்பிலிபிட்டிய மருத்துவ மனை |
|---|---|---|---|---|---|---|---|
| | மேலதிகம் | குறைவு | மேலதிகம் | குறைவு | மேலதிகம் | குறைவு | குறைவு |
| வைத்தியர்கள் | - | 02 | - | 68 | - | 30 | 34 |
| பல் வைத்தியர் | - | - | - | 03 | - | 14 | 02 |
| தாதியர் | - | 01 | 99 | - | - | 33 | 71 |
| நோயாளிகளைப் பராமரிப்போர் | - | - | - | 14 | - | 06 | 11 |
| மருத்துவ இரசாயனகூடவியலாளர் | - | - | - | 09 | - | 20 | 04 |
| கதிர்வீச்சு படப்பிடிப்பாளர் | - | - | - | 04 | 02 | - | 03 |
| உடற்கூறு தொழில்நுட்பவியாளர் | - | - | - | 03 | - | 04 | 01 |
| ஈ.சீ.ஜீ.அறிக்கையிடுவோர் | - | - | - | 05 | - | - | 02 |
| மருந்துக் கலவையாளர் | - | - | 09 | - | - | 47 | 01 |
| மருந்தாளர் | - | - | - | 11 | - | 18 | 04 |
| தொழில்சார் வைத்தியர் | - | - | - | 02 | - | - | 01 |
| பாடசாலைப் பல் மருத்துவர் | - | - | - | 04 | - | - | - |
| பூச்சிகள், புழுக்கள் தொடர்பான விஞ்ஞான உதவியாளர் | - | - | - | 08 | - | 01 | 01 |
| குடும்ப சுகாதார மருத்துவ தாதி | - | - | - | 125 | - | 126 | 10 |
| பொது சுகாதார பரிசோதகர் | 01 | - | - | 06 | - | 21 | - |
| பொது சுகாதார | 01 | - | 09 | - | - | 14 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வெளிக்கள உத்தியோகத்தர் | | | | | | | |
| கவனிப்பாளர் | - | - | - | 38 | - | - | 80 |
| ஆய்வுகூட பரிசோதகர் | - | - | - | 03 | - | - | - |
| சுகாதார பணி உதவியாளர் | - | 03 | 428 | - | 330 | - | 80 |
| வைத்தியசாலை கங்காணி | - | - | - | 07 | - | - | 01 |
| கண் மருத்துவர் | - | - | - | 01 | - | 01 | - |
| மொத்தம் | 02 | 06 | 545 | 311 | 332 | 335 | 306 |

## 6.19 வங்கிக் கணக்கிணக்கம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களது வங்கிக் கணக்குகளின் மூலம் வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததும் 06 மாதங்களைக் கடந்ததுமான ரூபா 1,027,670 கூட்டுத்தொகையுடைய 57 காசோலைகள் சம்பந்தமாக மாகாண நிதி விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 06 மாதங்களைக் கடந்த ரூபா 282,232 கூட்டுத்தொகையுடைய 31 தேறாத வைப்புகள் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவு மில்லை.

(ஆ) இனங்காணப்படாத 02 வங்கிக் கணக்குகளது செலவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 980,524 ஆகும்.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 7.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

மீளாய்வாண்டின்போது ஒரு அமைச்சிலும் ஒரு திணைக்களத்திலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 03 மாத்திரம் நடைபெற்றிருந்தன.

## 7.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

மாகாண கணக்குக் குழுவில் கலந்துரையாடப்பட்ட 2003 முதல் 2010 வரையிலான 08 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கிய 06 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பவற்றினது 25 கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாகக் குறித்தபடி திருத்தங்கள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபரகமுவ மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களதும் தலைமைச் செயலாளரதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | (i) மதிப்பீடு செய்யப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே முரண்கள் காணப்பட்டமை. |
| | (ii) நிலுவை வருமானம் அறவிடப்பட்டமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| | (ii) பொருள் மெய்மையாய்வு சகல அலுவலகங்களையும் மேவுகை செய்யும் வகையில் இடம்பெறாமை. |
| (ஈ) மனிதவள முகாமைத்துவம் | பதவியணியினர் பற்றாக்குறை மற்றும் மிகை காணப்பட்டமை |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | (i) நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டமை |
| | (ii) தாமதக் கட்டணம் அறவிடப்படாமை |
| (ஊ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் | (i) செயற்திட்டத்தை அமுலாக்கும் போது நீண்ட தாமதம் காணப்பட்டமை. |
| | (ii) ஆரம்பிக்கப்படாத செயற்திட்டம் காணப்படுகின்றமை. |
| (எ) பாடசாலை முகாமைத்துவம் | மாகாணத்தில் ஆசிரியர்களை சமநிலைப்படுத்துதல் நலிவான மட்டத்தில் காணப்பட்டமை |